Register No. | | | | | | | |

**TA5A**

**5000–21**

(For the candidates admitted from 2017-2018 onwards)

**LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, FEBRUARY 2022.**

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

**CIVIL PROCEDURE CODE**

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

**PART A** — (2 × 12 = 24 marks)

**Answer TWO of the following in about 500 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Describe the provisions of the Limitation Act for computation of period of limitation in the case of persons under legal disability.

   சட்டத் தகுநிலை இல்லாத நபர்கள் வழக்கிடுவதற்கென்று முற்படும் போது காலவரையறையில் பின்பற்ற வேண்டிய சட்டப் பிரிவுகள் யாவை?

2. Enumerate the essential requisites of pleading and describe the manner for amending pleadings.

   வாதுரையின் முக்கிய கூறுகளை வரிசைப்படுத்திக் கூறி அவைகளை திருத்துவதற்கான முறைகளை விவரி.

3. "An executing court cannot go behind the decree"– Substantiate the statement.

   ''நிறைவேற்றும் நீதிமன்றம் ஒன்று தீர்ப்பாணைக்குப்பின் செல்ல இயலாது'' - இந்த கூற்றினை நிலைநிறுத்துக.

**PART B** — (2 × 7 = 14 marks)

**Answer TWO of the following in about 300 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the scope and the powers of High Court in Revision. Distinguish it from Appeal.

   சீராய்வில் உயர்நீதிமன்றத்தின் எல்லையையும், அதிகாரங்களையும் விவாதிக்க. சீராய்வை மேல்முறையீட்டிலிருந்து வேறுபடுத்துக.

5. Who is an indigent person? Explain the procedure for filing a suit and appeal by an indigent person.

வழக்கிட வறிய நிலையிலுள்ள நபர் என்பவர் யார்? அத்தகையவர் ஓர் உரிமை வழக்கு மற்றும் மேல் முறையீடு தாக்கல் செய்வதற்கான நடைமுறையை விளக்குக.

6. When and for what purpose the court is empowered to appoint a commissioner? Narrate his power.

நீதிமன்றம் எப்பொழுது என்ன காரணங்களுக்காக ஒரு ஆணையாளரை நியமிக்க அதிகாரம் கொண்டுள்ளது? அவருடைய அதிகாரம் குறித்து எடுத்துக் கூறுக.

**PART C** — (5 × 4 = 20 marks)

7. **Write short notes on FIVE of the following :**

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Set off and counter claim.

எதிரிடை வாதம் மற்றும் எதிர் பாத்தியம்.

(b) Framing of issues.

வழக்கெழு வினா வனையப்படுதல்.

(c) Precept.

பற்றாணை.

(d) Ex parte decree.

ஒரு தலைப்பட்ச தீர்ப்பு.

(e) Misjoinder of parties.

தரப்பினர்களை தவறாகச் சேர்த்தல்.

(f) Foreign judgment.

அயல்நாட்டு தீர்ப்பு.

(g) Mesne profits.

அத்து மீறிய ஆதாயங்கள்.

**PART D** — (2 × 6 = 12 marks)

**Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'X' resided at Mumbai. 'Y' resided at Rajasthan and 'Z' at Bihar. While 'X', 'Y' and 'Z' were together at Bengaluru, 'Y' and 'Z' made a joint promissory note payable on demand and delivered it to 'X'. 'X' wants to file a suit against 'Y' and 'Z' Advice.

'X' என்பவர் மும்பையில் வசிப்பவர். 'Y' என்பவர் ராஜஸ்தானிலும் 'Z' என்பவர் பீகாரிலும் வசிப்பவர்கள். 'X', 'Y' மற்றும் 'Z' மூவரும் பெங்களூருவில் ஒன்றாக இருக்கும் போது 'Y' என்பவரும் 'Z' என்பவரும் சேர்ந்து கூட்டாக ஒரு கடனுறுதி பத்திரத்தை 'X' க்கு எழுதிக்கொடுத்திருந்தார்கள். 'X' என்பவர் 'Y' மற்றும் 'Z' என்பவர்கள் மீது வழக்கு தொடர விரும்புகிறார். வழி கூறுக.

9. 'A' sues 'B' for compensation on account of trespass. 'B' holds a promissory note for Rs.5,000/- executed by 'A'. He claims to set off that amount against any amount that 'A' may recover from him in the suit. Will he succeed?

'அ' என்பவர் 'ஆ'வுக்கு எதிராக அத்துமீறி நுழைந்ததற்காக நஷ்ட ஈடு கோரி வழக்கு தாக்கல் செய்கிறார். 'அ' என்பவர் ரூ.5,000/- க்கு எழுதிக்கொடுத்த கடனுறுதிச் சீட்டு 'ஆ'விடம் உள்ளது. அந்த தொகையை 'அ' தன்னிடமிருந்து கோரப் போகும் தொகைக்கு எதிராக கழித்துக்கொள்ள சரியீடு வாதம் செய்கிறார். அவர் வெற்றி பெறுவாரா?

10. 'A' belonging to Salem married 'B' at Palani and they lived together at Palani. 'B' never lived with her husband 'A' at his native place Salem. Since 'B' deserted her husband he filed a petition for restitution of conjugal rights at Salem court. Whether the petition is maintainable?

சேலத்தை சேர்ந்த 'அ' என்பவர் பழனியில் 'ஆ' என்பவரை திருமணம் செய்து கொண்டு இருவரும் சேர்ந்து பழனியில் குடும்பம் நடத்திவந்தனர். 'அ'யின் சொந்த ஊரான சேலத்தில் அவர்கள் சேர்ந்து வாழ்ந்ததில்லை. 'ஆ' தன்னை புறக்கணித்ததால் அவரது கணவர் 'ஆ' மீது சேலம் நீதிமன்றத்தில் தன்னுடன் வாழ வேண்டும் என கோரி மனுதாக்கல் செய்கிறார். அந்த மனு நிலைநிற்கத்தக்கதா?

Register No. | | | | | | | | |

# TA5B

**4933–21**

(For the candidates admitted from 2017 –2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, FEBRUARY 2022.

(Three – year Regular Course)

Third Year – Fifth Semester

## CRIMINAL PROCEDURE CODE

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What is First Information Report? Discuss its object and importance. What are the consequences for delay in filing First Information Report – Discuss with Lalitha Kumari/vs/Government of U.P and ors.

   முதல் தகவலறிக்கை என்றால் என்ன? அதன் நோக்கம் மற்றும் முக்கியத்துவத்தை விவாதி. காலதாமதமாக பதிவு செய்யப்படும் முதல் தகவலறிக்கையினால் ஏற்படும் விளைவுகள் என்ன என்பதை லலிதா குமாரி/எதிர்/ உத்திரபிரதேச அரசு வழக்குடன் விவாதி.

2. Explain the provisions related to maintenance of wives, children and parents under Criminal Procedure Code in the view of crime prevention.

   குற்ற தடுப்பு நோக்கில் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் குழந்தைகள், மனைவிகளுக்கு மற்றும் பெற்றோருக்கு வாழ்க்கை பொருளுதவி வழங்கும் வகையங்களை விளக்குக.

3. Write the provisions relating to execution, suspension, remission and commutation of sentences.

   தண்டனை நிறைவேற்றம், தண்டனை நிறுத்திவைப்பு, தண்டனை மன்னிப்பு மற்றும் தண்டனை குறைப்பு குறித்த சட்ட வகையங்கள் குறித்து எழுதுக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Distinguish between warrant trial and summon trial.

   பிடியாணை வழக்குகள் மற்றும் அழைப்பாணை வழக்கு விசாரணை வேறுபடுத்துக.

5. Discuss the facts and judgement of the case of Sheela Barse /vs/ Union of India (A.I.R. 1986 SC 1773).

சீலா பார்ஸே/எதிர்/இந்திய அரசு வழக்கு பொருண்மைகள் மற்றும் தீர்ப்பை குறித்து விவாதி (A.I.R. 1986 SC 1773).

6. Write a note on compoundable offence and compounding of non compoundable offences.

சமரசம் செய்து கொள்ளக்கூடிய குற்றங்கள் மற்றும் சமரசம் செய்து கொள்ள இயலாத குற்றங்களை சமரசம் செய்து கொள்வது குறித்து குறிப்பு எழுதுக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக.

(a) Habitual offenders

வழக்கமான குற்றவாளிகள்

(b) Review petition in Supreme Court

உச்சநீதிமன்றத்தில் மறு ஆய்வு மனு

(c) Importance of Section 133 of Cr. P.C.

குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 133ன் முக்கியத்துவம்

(d) Assistant public prosecutor and public prosecutor

உதவி அரசு குற்றத்துறை வழக்கறிஞர் மற்றும் அரசு குற்றவழக்குத் துறை வழக்கறிஞர்.

(e) Rights of the arrested person under Cr. P.C.

கைது செய்யப்பட்ட நபருக்கு கு.வி. நடைமுறைச் சட்டத்தின் கீழான உரிமைகள்.

(f) Difference between recording statements under Section 161 Cr. P.C. and 164 Cr. P.C.

கு.வி.ந.மு. சட்டம் பிரிவு 161 மற்றும் 164ன் கீழ் பதிவு செய்யப்படும் வாக்குமூலங்களிடையேயான வித்தியாசம்.

(g) Cognizable and Non-cognizable offences

புலன் கொள்ளக்கூடிய மற்றும் புலன் கொள்ள இயலாத குற்றங்கள்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. During a riot many relief centres were established by the government. Police was also deployed at these centres. In one of the centres 5 persons were killed. Their wives pray that they be given compensation in a case filed in the High Court-Decide.

கலவரங்களிடையே அரசால் ஆற்றுபடுத்தும் மையங்கள் அமைக்கப்படுகின்றது. அங்கு காவல் துறையினரும் பணியமர்த்தப்பட்டனர். அவ்வாறான ஆற்றுபடுத்துதல் மையம் ஒன்றில் 5 பேர் கொல்லப்பட்டனர். அவர்களின் மனைவிகள் இழப்பீடு கோரி உயர் நீதிமன்றத்தை அணுகினர். தீர்வு செய்க.

9. 'A' intending to blast a bridge carries a bomb near the bridge. He was to blast it only on the orders of his gang leader. While waiting near the bridge he is arrested by the police without warrant. 'A' directly approaches the High Court for bail-Decide.

'அ' பாலத்தை தகர்க்கும் உள்ளெண்ணத்துடன் குண்டுகளை சுமந்து கொண்டு பாலத்தின் அருகிலிருக்கிறார். பாலத்தை தகர்ப்பது என்பது 'அ' தனது ''கேங்க் '' லீடர் உத்தரவின் படி செய்ய எண்ணி காத்துக் கொண்டு இருந்த போது காவலர்கள் அவரை பிடியாணை இன்றி கைது செய்கின்றனர். 'அ' நேரடியாக உயர்நீதிமன்றத்தை அணுகி பிணை கோருகிறார். தீர்வு செய்க.

10. 'A' commits house-breaking by day with intent to commit adultery and commits, in the house so entered, adultery with B's wife. Judicial magistrate framed charge and convicted 'A' under Section 454 and 497 I.P.C. Is it maintainable?

'B'ன் மனைவியுடன் பிறன்மனை புணர்வில் ஈடுபடும் எண்ணத்துடன் 'A' பகல் பொழுதில் கன்னமிட்டு B யின் வீட்டில் நுழைந்து 'B'யின் மனைவி உடன் பிணர்மனை புணர்தலில் ஈடுபடுகிறார். குற்றவியல் நீதித்துறை நடுவர் இந்திய தண்டனை சட்டம் பிரிவு 497 மற்றும் 454ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து 'A'வை தண்டிக்கிறார். இது செல்லும் தன்மை உடையதா?

———————

**TA5C**

Register No. | | | | | | | | |

**5001–21**

(For the candidates admitted from 2017-2018 onwards)

**LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, FEBRUARY 2022.**

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

**ENVIRONMENTAL LAW**

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

**PART A** — (2 × 12 = 24 marks)

**Answer TWO of the following in about 500 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What is land pollution? What are the measures adopted by the Central Government in this regard?
நில மாசுக்கேடு என்றால் என்ன? இது குறித்து மத்திய அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

2. Discuss the standards of air quality imposed by Central Pollution Control Board under Air Quality Monitoring Programme.
சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு அமைப்பு திட்டத்தின் கீழ் மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் விதிக்கப்பட்ட காற்றின் பண்பின் தரங்களை விவாதிக்க.

3. Assess the quality of Environmental Impact Assessment in India.
இந்தியாவில் சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு தரம் பற்றி நிர்ணயம் செய்க.

**PART B** — (2 × 7 = 14 marks)

**Answer TWO of the following in about 300 words each.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss the role played by social movements in protecting environment.
சூழலைப் பாதுகாக்கும் சமூகத் தொண்டு இயக்கங்களின் பங்கினை விவாதிக்க.

5. Describe the procedure adopted by the government in protecting Biological Diversity.
'பல்லுயிர் பெருக்கம்' பாதுகாப்பிற்கு அரசு கையாளும் நடைமுறைகளை விவரிக்க.

6. Explain the object of the Public Liability Insurance Act, 1991 with reference to cases.
பொதுப் பொறுப்படைவு காப்பீட்டுச் சட்டம் 1991-ம் ஆண்டின் நோக்கங்களை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் விளக்குக.

**PART C** — (5 × 4 = 20 marks)

7. **Write short notes on FIVE of the following :**
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Conversion on the protection of ozone layer.
ஓசோன் அடுக்கு பாதுகாப்பு உடன்படிக்கை.

(b) Mass Tort Action.
பெருந்தீங்கியல் வழக்கு.

(c) Socio-economic effects of Air Pollution.
காற்றின் மாசுக்கேட்டினால் ஏற்படும் சமுதாய பொருளாதார விளைவுகள்.

(d) E-waste.
மின் கழிவு.

(e) Environmental Audit.
சூழல் தணிக்கை.

(f) Recycled Plastics.
மறுசுழற்சி நெகிழி.

(g) Brundtland Commission Report.
புருண்ட்லாண்ட் ஆணை குழு அறிக்கை.

## PART D — (2 × 6 = 12 marks)

**Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.**

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A case was filed against the State Government's Act of diverting eco-fragile areas to commercial project activities without receiving clearance under environmental laws violating the wildlife, forest and people's right. Decide.
சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புச் சட்டங்களின் கீழ் உரிய பாதுகாப்பு அனுமதி பெறாமல் சூழல் பலவீனமான பகுதிகளை திட்ட செயல்பாடுகளுக்கு மாநில அரசு இடங்களை ஒதுக்கீடு செய்தது. இச்செயல் வன உயிரியியல், காடுகள் மற்றும் மனித உரிமைகளை பறிப்பதாக உள்ளது என்று வழக்கிடப்பட்டது - தீர்மானிக்க.

9. The Government of Orissa allotted a portion of land from a zoological garden for the construction of five star hotel. A Public Interest Litigation was filed on the ground that the government's decision violates the provisions of Forest Act. Decide.
ஒரிஸ்ஸா அரசு உயிரியியல் பூங்காவின் ஒரு பகுதி நிலத்தினை ஐந்து நட்சத்திர விடுதி கட்டுவதற்காக ஒதுக்கியது. அரசின் இந்த முடிவு காடுகள் சட்டத்தினை மீறுவதாக கூறி பொது நல வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. தீர்மானிக்க.

10. A state government granted mining of limestone licence to 'A' in a ecologically sensitive area. Mr. Maniyan, a social activist filed a writ petition before the Supreme Court for stopping the mining activities. 'A' challenged that he has a fundamental freedom to carry on any trade or business.Decide
சுற்றுச்சூழல் பாதிப்பிற்கு உள்ளாகும் பகுதியில் சுண்ணாம்புக் கல் வெட்டியெடுப்பதற்கு 'அ'விற்கு மாநில அரசு உரிமம் வழங்கியது. திரு. மணியன் என்ற சமூக ஆர்வலர் உச்ச நீதிமன்றத்தில் ஓர் நீதிப் பேராணை மனுவைத் தாக்கல் செய்து அனைத்து வேலைகளையும் நிறுத்தக் கோரினார். தனக்கு எந்த தொழிலையும் செய்ய அடிப்படை சுதந்திரம் உள்ளதாக 'அ' மறுதலிக்கிறார். தீர்மானிக்க.

———————

Register No. | | | | | | | | |

# TA5D

**5002–21**

(For the candidates admitted from 2017-2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, FEBRUARY 2022.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

## LABOUR LAW – II

Time : $2\frac{1}{2}$ hours    Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. When is an employer liable to pay compensation to the worker under the Employees' Compensation Act 1923? Also explain the theory of Notional Extension with relevant case laws.

   பணியாளர் ஒருவருக்கு இழப்பீடு வழங்க எப்பொழுது ஒரு பணி வழங்குநர் தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் 1923-ன் கீழ் கடப்பாடு உடையவராகிறார்? மற்றும் பணி நேரத்தின் விரிவாக்க கோட்பாட்டையும் தகுந்த தீர்மானித்த வழக்குகள் துணையுடன் விளக்கவும்.

2. Explain the various provisions relating to health and safety of workers provided under the Factories Act 1948.

   1948-ம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் தொழிலாளர்களின் உடல் நலம் மற்றும் பாதுகாப்பு குறித்த வகையங்களை விளக்கவும்.

3. What is Bonus? When and how are employees entitled to be paid bonus under the Payment of Bonus Act, 1965?

   மீதூதியம் என்றால் என்ன? 1965-ம் ஆண்டு மீதூதியம் வழங்கல் சட்டத்தின் கீழ் எப்பொழுது மற்றும் எவ்வாறு பணியாளர்கள் மீதூதியம் பெற உரிமையுடையவர்களாகிறார்கள்?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Briefly outline the benefits available under the Employee's State Insurance Act, 1948.

பணியாளர்களுடைய அரசு காப்பீட்டு சட்டம் 1948-ன் கீழ் கிடைக்கக்கூடிய நலன்களை எடுத்துக் கூறுக.

5. Explain the salient features of the Tamil Nadu Shops and Establishments Act, 1947.

தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947-ன் சிறப்பு இயல்புகளை விவரிக்கவும்.

6. What are the establishments exempted from the Employees' Provident Funds Act 1952? What is the rationale behind such exemption?

1952-ஆம் ஆண்டின் பணியாளர் வைப்பு நிதிச் சட்டத்தில் விலக்களிக்கப்பட்டுள்ள தொழில்கள் யாவை? அவை எந்த அடிப்படையில் அந்த விலக்களிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) Full Bench Formula.

நீதிப் பேராயம் வகுத்துள்ள முறை.

(b) Occupational Disease.

பணி சார்ந்த நோய்.

(c) Maternity Benefit.

பேறுகால சலுகை.

(d) Appointment of welfare officer.

தொழிலாளர் நல அதிகாரிகளை நியமித்தல்.

(e) Powers and duties of Factory Inspector.

தொழிலாளர் ஆய்வாளரின் கடமைகள் மற்றும் அதிகாரங்கள்.

(f) Notice by Occupier.

பொறுப்பாட்சியாளரின் அறிக்கை.

(g) Payment of gratuity.

பணிக்கொடை வழங்கல்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A restaurant, situated in a shopping mall is run by a contractor. The ESI authorities directed the mall owner to pay contribution towards the employees employed in the mall, but he refused. Examine the liability of the mall owner.

ஒரு கடைகள் வளாகத்தில் அமைந்துள்ள உணவகத்தை ஒரு ஒப்பந்தக்காரர் நடத்தி வந்தார். பணியாற்றும் தொழிலாளர்களுக்கு தவணைக் கட்டணம் செலுத்துமாறு கடைகள் வளாக உரிமையாளரை இ.எஸ்.ஐ. அதிகாரிகள் பணித்தனர். ஆனால் அவர் அதற்கு மறுப்பு தெரிவித்தார். கடைகள் வளாக உரிமையாளரின் கடப்பாட்டினை ஆராய்க.

9. Raju was dismissed from service on the charges of misappropriation of funds. Subsequently he gave an application for payment of Provident Fund. The company refused. Decide.

ராஜு என்ற பணியாளர் நிதியத்தை மோசடியாகக் கையாடல் செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டார். அதன் பின் தனக்குரிய எதிர்காலக் காப்பு நிதியத் தொகையைக் கொடுக்குமாறு கோரி அவர் மனு செய்தார். ஆனால் கம்பெனி மறுத்தது - முடிவு செய்க.

10. Malathi is an employee of 'sunflower' Tea Plantation in Ooty. She was terminated from service for disablement due to an accident. She has completed four years of continuous service. Is she entitled to claim gratuity?

ஊட்டியில் உள்ள 'சன் பிளவர்' தேயிலை தோட்டத்தில் மாலதி என்பவர் ஒரு பணியாளர். ஒரு விபத்தின் காரணமாக ஏற்பட்ட உடற்தகுதியிழப்பின் காரணமாக அவர் பணியிருந்து நீக்கம் செய்யப்பட்டார். அவர் நான்கு ஆண்டுகள் தொடர்ச்சியான பணியினை நிறைவு செய்தவர். அவர் பணிக்கொடை கோர இயலுமா?

---

Register No. | | | | | | | | |

**TA5E**

**4934–21**

(For the candidates admitted from 2017 –2018 onwards)

LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, FEBRUARY 2022.

(Three-year Regular Course)

Third Year – Fifth Semester

LAW OF TAXATION

Time : $2\frac{1}{2}$ hours

Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Define “Tax”. Distinguish between tax, fee, fine and toll.

   வரி என்பதை வரையறுத்து, கட்டணம், அபராதம் மற்றும் சுங்கம் ஆகியவைகளை வரியிலிருந்து வேறுபடுத்திக் காட்டுக.

2. Briefly enumerate the various incomes which do not form part of total income under the Income Tax Act 1961.

   1961 ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தின் கீழ் மொத்த வருமானத்தில் உள்ளடங்காத பல்வேறு வருமானங்களை சுருக்கமாக கூறுக.

3. Narrate the definition of supply under the Central Goods and Services Tax Act 2017.

   மத்திய சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச்சட்டம் 2017 ன் கீழ் வழங்கீட்டை வரையறுத்துக் கூறவும்?

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Give an account of the various types of set-off and carry forward under the Income Tax Act 1961.

   வருமான வரிச் சட்டம் 1961ன் கீழ் வரியைச் சரிக்கட்டுதல் மற்றும் முன்னோக்கி எடுத்துச் செல்லுதல் குறித்த வெவ்றேு வகைகளை கூறுக.

5. Discuss the constitutional validity of GST Act introduced in India.

இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரிச்சட்டத்தின் அரசமைப்பு செல்லும் தன்மையை விவாதிக்கவும்.

6. Analyse prohibition of import and export of goods, and the provisions regarding notified and specied good's.

பொருட்களின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தடை மற்றும் அறிவிக்கப்பட்ட மற்றும் குறிப்பிடப்பட்ட பொருட்கள் தொடர்பான வகையங்களை பகுப்பாய்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக :

(a) Canon of taxation

வரிவிதிப்பு கொள்கைகள்

(b) Persons

நபர்கள்

(c) Allowances

படிகள்

(d) Written down value

குறைத்து எழுதப்பட்ட மதிப்பு

(e) Customs frontier

சுங்க முனை

(f) Capital gain

மூலதன ஆதாயம்

(g) GST Council

சரக்குகள் மற்றும் சேவை வரி குழு.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்களைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Mr. Faizal imported "Neem Computer" from China. Since the labels were damaged, he relabelled before customs clearance. Customs authorities enhanced the value more than real value. Mr. Faizal wants to challenge this. Advise.

திரு. பைஷல் என்பவர் ''நீம் கம்ப்யூட்டர்''களை சீனாவிலிருந்து இறக்குமதி செய்தார். அதில் இருந்த விவரப்பட்டியல் சற்று பழுது பட்டிருந்ததால் சுங்கத் தீர்வை அலுவலர்கள் அக்கம்ப்யூட்டர்களுக்கு சுங்கத் தீர்வை அனுமதி வழங்கும் முன் மறு விவரப் பட்டியலை அதற்கு வைத்தார். இதற்காக சுங்க அலுவலர்கள் கம்ப்யூட்டர்களின் மதிப்பை ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட மதிப்பை விட அதிகப்படுத்தினார்கள். திரு. பைஷல் இதனை மறுதலிக்க விரும்புகிறார். ஆலோசனை வழங்குக.

9. Arun is aged about 85 years and his Annual income for the previous year 2019-20 is Rs.8,45,000. He has undergone cancer treatment and has spent Rs.1,00,000. Calculate the income tax for the assessment year 2020-21.

85 வயதுடைய அருண் என்பவரின் 2019–20 முந்தைய ஆண்டில் ஆண்டு வருமானம் ரூ.8,45,000. அவர் புற்றுநோய் சிகிச்சை மேற்கொண்டுள்ளார். அதற்காக ரூ. 1,00,000 செலவு செய்துள்ளார். மதிப்பீட்டு ஆண்டு 2020–21ற்கான வருமான வரியை கணக்கிடுக.

10. The annual value of house property of Mr. Mithun in the previous year 2019-20 is Rs.6,20,000. He paid Rs.40,000 as interest for repayment of house loan. He paid Rs.15,000/- as property tax. Calculate the income tax to be payable by Mithun for the Assessment year 2020-21.

2019–20 ஆம் முந்தைய ஆண்டில் மிதுன் என்பவரின் வீட்டு சொத்தின் ஆண்டு மதிப்பு ரூ.6,20,000, வீட்டு கடனுக்கு ரூ.40,000 வட்டியாக செலுத்துகிறார் மற்றும் சொத்து வரியாக ரூ.15,000 செலுத்துகிறார் எனில் வரி விதிப்பாண்டு 2020–21யில் மிதுன் செலுத்த வேண்டிய வருமான வரியை கணக்கிடவும்.